# புதிய உடன்படிக்கை - புதிய மற்றும் மிகச் சிறந்த வழி

*இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே (எபி. 8:6, 7).*

புதிய உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையின் மறுவார்த்தையுருவாக்கமாக மட்டும் இருந்தது என்றால் தேவன் ஏன் அதைக் கொடுத்தார்? அது முதலாவதைப் போன்றதாகவே இருந்தால், அது அவசியமற்றதாய் இருந்திருக்கும். பழைய ஏற்பாடானது அதன் நோக்கத்தை நிறைவேற்றியிருந்தது, எனவே தேவன் புதிய மற்றும் மாறுபட்ட உடன்படிக்கையைக் கொண்டு வந்தார்.

பழைய உடன்படிக்கையானது அதின் சட்டங்கள் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றில் புதிய ஏற்பாட்டுடன் சில ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது; ஆனால் நோக்கம், அணுகுமுறை மற்றும் - மிகவும் தெளிவாக - பாவ மன்னிப்புக்கான அதன் நியமங்கள் ஆகியவற்றில் அது பெருத்த மாறுபாடுகளையும் கொண்டுள்ளது.[1] இவைகளுக்குப் பின்னால், இந்த உடன்படிக்கைகளுக்கிடையில் மற்ற பல வித்தியாசங்களும் உள்ளன. அவைகளில் சில, மாதிரிகள் மற்றும் அதற்கு ஒப்பனையானவைகள் என்ற வகையில் ஒப்பிடத் தக்கவையாக உள்ளன (அடுத்து வரும் பக்கங்களிலுள்ள அட்டவணைகளைக் காணவும்).

## "நியாயப்பிரமாணம்" மற்றும் "உடன்படிக்கை" என்ற வார்த்தைகள்

புதிய ஏற்பாட்டில், "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தையானது தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் நாட்டுக்குக் கொடுத்திருந்த கட்டளைகள் ஒவ்வொன்றையும் மற்றும் அனைத்தையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. இவைகள் அவ்வுடன்படிக்கையில் உள்ள யாவற்றையும் - பத்துக் கட்டளைகளை மட்டுமின்றி, "சட்டங்கள்," "நீதி நியாயங்கள்," "கட்டளைகள்," "நியமங்கள்," "கொள்கைகள்" மற்றும் "சாட்சியங்கள்" என்று பலவாறு அழைக்கப்படும் அறிவுறுத்துதல்கள்

யாவற்றையும் - உள்ளடக்குகின்றது.

மலைப்பிரசங்கத்தில் இயேசு நியாயப்பிரமாணத்தைப் பற்றிப் பேசினார் (மத். 5:17). பின்பு அவர் பத்துக் கட்டளைகளில் இரண்டை மேற்கோள் காட்டினார்: ''கொலை செய்யாதிருப்பாயாக'' மற்றும் "விபசாரம் செய்யாதிருப்பாயாக" (மத். 5:21, 27). மேலும் அவர் விவாக ரத்திற்கான "தள்ளுதற் சீட்டு," "பொய்யாணைகள்," "நேர்ந்துகொண்டதை" நிறைவேற்றுதல், "கண்ணுக்குக் கண், மற்றும் பல்லுக்குப் பல்" மற்றும் "உன் அயலான் மீது அன்பு காட்டு" (மத். 5:31, 33, 38, 43) என்பவைகளையும் குறிப்பிட்டார். இருப்பினும் நியாயப்பிரமாணத்திலேயே மகா பெரியதும், மிகவும் முக்கியதுமான ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூருவாயாக'' (மத். 22:37, 38) என்பது பத்து கட்டளைகளில் காணப் படுவதில்லை. நியாயப்பிரமாணமானது ஆசாரியர்கள் ஓய்வுநாளை மீறுவதற்கு அனுமதித்தது (மத். 12:5) என்று இயேசு கூறினார், இது ஓய்வுநாளில் மிருக பலி செலுத்துதல் என்ற செயலினாலேயே என்பது தெளிவாகும் (எண். 28:9, 10). பவுல் நியாயப்பிரமாணத்தை மேற்கோள் காண்பித்த பொழுது ("இச்சியாதிருப்பாயாக"; ரோமர் 7:7), அவர் பத்துக் கட்டளைகளையே குறிப்பிட்டார் என்பது தெளிவு. அவர் அன்பானது "நியாயப்பிரமாணத்தை" நிறைவேற்றுகின்றது என்று எழுதிய பின்பு, பத்துக் கட்டளைகளில் ஐந்தை மேற்கோள் காண்பித்ததினால் தாம் "நியாயப் பிரமாணம்'' என்பதன் மூலம் அர்த்தப்படுத்தியது என்ன என்பதைக் காண்பித்தார் (ரோமர் 13:8, 9). யாக்கோபு கூடத் தாம் ''நியாயப் பிரமாணம்" (யாக். 2:10, 11) என்ற வார்த்தையைப் பயன்படுத்திய பொழுது பத்துக் கட்டளைகளைத் தாம் உள்ளடக்கியதாகக் காண்பித்தார். இயேசுவும், ஏவப்பட்ட இந்த எழுத்தாளர்களும் வித்தியாசம் எதையும் ஏற்படுத்தவில்லை, ஆனால் பழைய ஏற்பாட்டின் கட்டளைகள் எதையும் நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியாகவே கருதினார்கள்.

இரண்டு ஏற்பாடுகளிலுமே "மோசேயின் பிரமாணத்திற்கும்" மற்றும் "கர்த்தரின் பிரமாணத்திற்கும்" இடையில் எந்த வேறுபாடும் ஏற்படுத்தப் படவில்லை. இந்த வார்த்தைப் பதங்கள் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றா கப் பயன்படுத்தப்பட்டன (லூக். 2:22-24). நியாயப்பிரமாணமானது தேவனுடைய நியாயப்பிரமாணம் என்று கருதப்பட வேண்டியதாயுள்ளது. ஏனெனில் அது மோசேயிடமிருந்தல்ல தேவனிடத்திலிருந்தே தொடக்கம் பெற்றது. "மோசேயின் நியாயப்பிரமாணத்தில்" எழுதியுள்ளது "கர்த்தர் கட்டளையிட்டவைகளே" எழுதப்பட்டுள்ளது (2 இரா. 14:6). இதனால் தான் தாவீது சாலொமோனுக்கு, "மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சிகளையும் கைக்கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக" (1 இரா. 2:4; மேலும் 2 நாளா. 33:8ஐயும் காணவும்) என்று கூற முடிந்தது. இந்த ஒழுங்கு முறைகள் "மோசேயைக் கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்திலே" (2 நாளா. 34:14) உள்ளன. "நியாயப்பிரமாணப் புத்தகமானது" (2 இரா. 22:11) "உடன்படிக்கையின்

புத்தகம்" (2 இரா. 23:2) என்றும் அழைக்கப்பட்டது.

எஸ்றா, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறினவேதபாரகனாயிருந்தான்" (எஸ்றா 7:6). அவரிடத்தில் அரசர், "கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுத்திருந்த மோசேயின் நியாயப்பிரமாணப் புத்தகத்தைக் கொண்டு வரும்படி'' கேட்டுக் கொண்டார். பிற்பாடு இந்தக் கூற்றானது ஏற்படுத்தப்படுகின்றது: "அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து" (நெகே. 8:1, 8; வசனங்கள் 14, 18; 10:29, 34 ஆகியவற்றையும் காணவும்). இந்த வசனங்களில் காணப்படுகிறபடி, மோசேயின் நியாயப்பிரமாணமும் தேவனுடைய நியாயப்பிரமாணமும் ஒன்றே என்பது தெளிவாகும்.

புதிய ஏற்பாடானது "முதலாவது" அல்லது "பழைய" உடன்படிக்கையைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் பத்துக் கட்டளைகளானது எப்பொழுதுமே உள்ளடக்கப்படுகின்றது. "மோசேயின் நியாயப்பிரமாணத்தின் புத்தகம்," "தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் புத்தகம்" மற்றும் "உடன்படிக்கையின் புத்தகம்'' என்பது மூன்று மாறுபட்ட புத்தகங்கள் அல்ல. அதே வழிமுறையிலேயே, ''மோசேயின் நியாயப்பிரமாணம்'' என்பதும் "தேவனுடைய நியாயப்பிரமாணம்" என்பதும் வித்தியாசப்பட்ட பிரமாணங்கள் அல்ல, ஆனால் அவைகள் ஒரே விதமான பிரமாணமே ஆகும். நியாயப்பிரமாணமானது பத்து கட்டளைகள் மற்றும் தேவன் மோசேயின் மூலமாகக் கொடுத்த நியாயப்பிரமாணத்தின் எஞ்சிய பகுதிகள் உட்பட தேவன் மோசேக்குக் கட்டளையிட்டிருந்த ஒவ்வொன்றையும் உள்ளடக்கியிருந்தது. இது உண்மையாக இருக்கும் பட்சத்தில், "உடன்படிக்கை" என்ற வார்த்தையானது எல்லா விஷயங்களிலும் பயன்படுத்தப்படாதிருந்தாலும் கூட, பழைய உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கை ஆகியவற்றிற்கு இடையே ஒரு ஒப்பீடானது ஏற்படுத்தப்பட முடியும்.

உடன்படிக்கைகள் ஒப்பிடப்படுகையில், அவை ஒவ்வொன்றின் தனிச் சிறப்பும் தெளிவாகின்றது. தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் இருந்த முதலாம் உடன்படிக்கையானது மோசேயினால் மத்தியஸ்தப்படுத்தப்பட்ட ஒரு ஒப்பந்தமாய் இருந்தது. அதன் கீழ், ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் விருத்தசேதனத்தினால் முத்திரையிடப்பட்டவர்களும், அந்த உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்தவர்களுமாய் இருந்தனர். இரண்டாம் உடன்படிக்கையானது இயேசுவினால் மத்தியஸ்தப்படுத்தப்பட்டது, இது எல்லா நாடுகளிலும் உள்ள மக்களுக்கானதாக உள்ளது. இந்த உடன்படிக்கையிலிருந்து பயன் பெற வேண்டுமென்றால், நாம் தேவனால் பிறந்து, பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டு, புதிய வாழ்வை வாழ வேண்டும்.

இரு உடன்படிக்கைகளையும் கருத்தில் கொண்டு எபிரெய எழுத்தாளர் இயேசு மத்தியஸ்தராக உள்ள உடன்படிக்கை பற்றிப் பின்வரும் கூற்றை ஏற்படுத்தினார்: ''இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும்

பெற்றிருக்கிறார்" (எபி. 8:6).

## இரண்டு உடன்படிக்கைகளின் ஒரு ஒப்பீடு

**பழைய உடன்படிக்கை**

1. முதலாம் உடன்படிக்கையைத் தேவன் ஏற்படுத்தினார் (உபா. 5:2).

2. இது இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்ட பொழுது அமுலுக்கு வந்தது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபின் கர்த்தர் அவர்களோடே உடன்படிக்கை பண்ணுகிறபோது (1 இரா. 8:9அ).

3. மோசே மத்தியஸ்தராய் இருந்தார் (உபா. 5:5அ).

4. முதலாவதான இது மிருகங்களின் இரத்தத்தினால் அர்ப்பணிக்கப் பட்டது. அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங் களின்மேல் தெளித்து, கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான் (யாத். 24:8).

5. முதலாவதானது இஸ்ரவேலுடன் ஏற்படுத்தப்பட்டது (1 இரா. 8:9).

6. இஸ்ரவேலர்கள் நியாயப் பிரமாணத்தின் கட்டளைகளை காத்து நடக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். நீங்கள் கைக்கொள்ள வேண்டும் என்று அவர் உங்களுக்குக்

**புதிய உடன்படிக்கை**

1. புதிய உடன்படிக்கையையும் தேவனே ஏற்படுத்தினார் (எரே. 31:31அ).

2. இது இயேசு சிலுவையில் மரித்த பொழுது அமுலுக்கு வந்தது. "ஏனென்றால் எங்கே மரண சாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரண சாதனம் உறுதிப்படும்" (எபி. 9:16, 17அ).

3. இயேசு மத்தியஸ்தராய் இருக்கின்றார் (எபி. 12:22-24அ).

4. இரண்டாவதான இது இயேசு வின் இரத்தத்தினால் அர்ப் பணிக்கப்பட்டது. "பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவ மன்னிப்புண்டாகும்படி ... புது உடன்படிக்கைக்குரிய என்னு டைய இரத்தமாயிருக்கிறது" (மத். 26:27, 28) என்றார்

5. இரண்டாவதானது எல்லா மக்களுக்குமானதாக உள்ளது (மாற். 16:15).

6. இயேசுவின் கட்டளைகள் எல்லா மக்களுக்கும் உரியவை களாயிருக்கின்றன. இயேசு தம்முடைய பின்பற்றாளர்கள் சகல இனங்களிலும் சீஷர்களை ஏற்படுத்தி, "நான் உங்களுக்குக்

*கட்டளையிட்ட பத்துக் கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை (உபா. 4:13, 14).*

*கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத். 28:19, 20அ), என்று கூறினார்.*

*7. நீண்டிருக்கும் வாழ்வும், இஸ்ரவேல் நாட்டில் வளமையும் கீழ்ப்படிதலுக்கு ஆசீர் வாதங்களாய் இருந்தன. நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்துச் சுகித்து, நீடித் திருக்கும்படி உங்கள் தேவனா கிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கக் கடவீர்கள் (உபா. 5:33).*

*7. இந்த வாழ்விலும் இனிவரும் வாழ்விலும், பரலோகத்தில் நித்திய ஜீவனிலும் தேவனுடைய பராமரிப்பு என்பதே கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதங் களாய் உள்ளன. "அவர் (தேவன்) ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாக்கும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார் அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேது. 1:4, 5).*

*8. உலகப்பிரகாரமான சாபங்களும், கடைசியில் தேசத்திலிருந்து அடிமைத்தனத்தில் வெளியேற்றப்படுதலும் கீழ்ப் படியாமைக்குத் தண்டனையாய் இருந்தது. அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக அவரது உடன்படிக்கையை அவர்கள் முறித்துப் போட்டால், அவர்களைக் கடுமையாகத் தண்டிப்பதாகத் தேவன் கூறினார் (லேவி. 26:14-33). அவர்கள் மாறவில்லையென்றால் இஸ்ர வேலர்கள் நாடுகளின் மத்தியில் சிதறடிக்கப்படுவார்கள் என்று அவர் கூறினார் (லேவி. 26:33).*

*8. நரகத்தில் நித்திய அங்கலாய்ப்பே கீழ்ப்படியாமைக்குத் தண்டனையாக உள்ளது. "அவர்களுடைய வாதையின் புகை சதா காலங்களிலும் எழும்பும்; இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி. 14:11); "அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் ..." (மத். 25:46அ).*

*9. உள்ளடக்கப்பட்டவர்கள் இஸ்ரவேல் புத்திரர்களாய் இருந்தனர் (1 இரா. 8:9). அவர்கள் இஸ்ரவேல் என்று பெயர் மாற்றப்பட்ட யாக்கோ பின் சந்ததியார்களாய் இருந்தனர் (ஆதி. 32:28அ).*

*9. உள்ளடக்கப்பட்டவர்கள் தேவனுடைய புத்திரர்களாய் இருந்தனர். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் ... நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" (ரோமர் 8:16அ, 17).*

10. *இவர்கள் உடல் ரீதியான பிறப்பினால் பிள்ளைகளாயினர். பவுல், மாம்சத்தின்படி என் இனத்தாராகிய அவர்கள் இஸ்ரவேலரே (ரோமர் 9:3அ, 4அ) என்றார்.*

10. *இவர்கள் ஆவிக்குரிய பிறப்பினால் பிள்ளைகள் ஆகின்றனர். "அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப் படுகிறார்கள்" (ரோமர் 9:8). இந்தச் சந்ததிகள், "இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்" (யோவா. 1:13; கலா. 3:26, 27ஐயும் காணவும்).*

11. *விருத்தசேதனம் என்பது புத்திரத்துவத்தின் அடையாளமாகவும் முத்திரையாகவும் இருந்தது. "உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்த சேதனம் பண்ணக் கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" (ஆதி. 17:11).*

11. *பரிசுத்த ஆவியானவரின் வரமானது முத்திரையாய் உள்ளது. "... அவர் நம்மை முத்தரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார் (2 கொரி. 1:21, 22); நீங்களும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியாய் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் ... ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே. 1:13ஆ, 14ஆ; கலா. 4:6ஐக் காணவும்).*

12. *முதலாவதானது மரணத்திற்கும் ஆக்கினைக்கும் செயல்படுத்துதலாக இருந்தது. "எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக் கேதுவான ஊழியத்தை ..." (2 கொரி. 3:7); "ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால் ..." (2 கொரி. 3:9அ).*

12. *இரண்டாவதானது நீதியினாலும் ஆவியினாலும் செயல்படுத்துதலாய் உள்ளது. "... ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? ... நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே' (2 கொரி. 3:8, 9).*

## மிகச் சிறந்த ஒரு உடன்படிக்கை

முதலாம் உடன்படிக்கையானது சமுதாயத்தால் நியாயந்தீர்க்கப்படக் கூடிய (லேவி. 19:15) மற்றும் தண்டனை அளிக்கப்பட்ட (எண். 15:30, 31) செயல்பாடுகளை ஆளுகை செய்தது. அதன் கட்டளைகள் ஒரு நாட்டின் மக்களுக்குரியவைகளாய் இருந்தன, அது தேவனிடத்திலும் மற்றவர் களிடத்திலும் நடந்து கொள்வது எப்படி என்று அவர்கள் புரிந்து கொள்ள உதவியாகத் தரப்பட்டது. இரண்டாவதானது, நாம் தேவனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் கொள்ளும் உறவு முறைகளில் எவ்விதம் செயல் படுகிறோம் என்பதைப் பாதிக்கும் நமது இருதயத்தின் விஷயங்களை ஆளுகை செய்கின்றது. இந்த உடன்படிக்கையின் கீழ் நியாயத்தீர்ப்பும் (மத். 7:1) தண்டனையும், இருதயத்தை ஆராய்ந்து அறியக்கூடிய ஒரே ஒருவரான (1 சாமு. 16:7), தேவனிடம் விட்டு விடப்பட வேண்டியவை களாய் உள்ளன (ரோமர் 12:19; 2 தெச. 1:7, 8).

முதலாவது தான் செய்யக் கூடியதில் பலவீனமாய் இருந்தது மற்றும் பாவம் நிறைந்த மனிதருக்கு எதுவும் செய்ய முடியாததாக இருந்தது. இரண்டாவதானது இயேசுவின் வல்லமையின் மூலமாக அவசியமான எல்லாவற்றையும் செய்ய முடிகின்றது. "... மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிராணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோமர் 8:3).

## மிகச் சிறந்த ஒரு நோக்கம்

குறைவுள்ள ஒரு உடன்படிக்கையைத் தேவன் கொடுத்தாரா? (எபி. 8:7ஐக் காணவும்.) தேவனுடைய கண்ணோக்கில் அவர் அதை ஏற்படுத்திய நோக்கத்திற்கு அது முழு நிறைவானதாகவே இருந்தது. நியாயப் பிரமாணத்தின் மூலமாகத் தேவன் மனிதருக்குப் பாவம் என்றால் என்ன? (ரோமர் 7:7) மற்றும் பாவமுள்ளது எது? (ரோமர் 7:13) என்பதற்கான ஒரு அளவீட்டைக் காண்பித்தார். "இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால் ..." (ரோமர் 3:20அ). இவ்வழிமுறையில் தேவன், பாவம் என்பது எவ்விதத்தில் தம்முடைய இயல்புக்கு முரணானதாக உள்ளது (ரோமர் 3:23), அது தம்முடைய சித்தத்தை எவ்விதம் மீறுகின்றது (ரோமர் 4:15), மற்றும் அது எவ்விதம் முழுமையான பாவமுள்ளதாய் உள்ளது (ரோமர் 7:13) என்பதை வெளிப்படுத்தினார். நியாயப்பிரமாணமானது பாவத்தைத் தடுத்து நிறுத்தக் கூடிய ஒரு அளவீடாகக் கொடுக்கப்பட்டது. "அது அக்கிரமங்களினிமித்த மாகக் கூட்டப்பட்டது" (கலா. 3:19). அதன் மூலமாக அப்படிப்பட்ட ஒரு ஆக்கினையிலிருந்து தேவனால் திட்டமிடப்பட்ட ஒரு மீட்பர் மூலமாக மனித குலமானது விடுதலையாக்கப்படும் வரைக்கும் எல்லா மக்களும் பாவத்தின் கீழ் அடைத்துப் போடப்பட்டனர் (கலா. 3:22).

இயேசு என்ற சந்ததி தோன்றும் வரைக்கும் (கலா. 3:19) நம்மைப்

பொறுப்புடன் காத்துக் கொள்வதற்காக நியாயப்பிரமாணமானது ஒரு உபாத்தியாக அல்லது பாதுகாவலராக (கலா. 3:23, 24)க் கொடுக்கப்பட்டது. இப்பொழுது இயேசு வந்திருப்பதால், நியாயப்பிரமாணமானது அதன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டது. இனியும் நாம் உபாத்திக்கு அல்லது பாதுகாவலருக்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல (கலா. 3:25).

ஒரு கருத்தில், நியாயப்பிரமாணமானது பிழையற்றதாக இருக்கவில்லை (எபி. 8:7) ஏனெனில் அது பாவம் நிறைந்த ஒரு மனிதரைப் பூரணப்படுத்த இயலவில்லை (எபி. 7:19அ). தரஅளவு என்ற வகையில், நியாயப்பிரமாணமானது ஒரு மீறுதலுமின்றி முழுமையான கீழ்ப்படிதலைக் கேட்டுக் கொண்டது (கலா. 3:10; யாக். 2:10). பாவம் நிறைந்த தவறெதுவும் செய்யாமல் நாம் வாழ்வதில்லை என்பதை இந்தத் தரஅளவையானது வெளிப்படுத்திற்று. இவ்விதமாக இது உபாத்தி என்ற வகையில் (கலா. 3:25) தனது நோக்கத்தை நிறைவேற்றி, பாவிகளுக்கு ஒரு மீட்பர் தேவை என்பதை நமக்குக் காண்பித்தது.

நியாயப்பிரமாணத்தின் நோக்கமானது பின்வருமாறு விளக்கப் படலாம். ஃப்ளோரிடாவில் வாழும் ஒரு மனிதர், கானடாவில் உள்ள ஒரு நண்பரை ஒரு கோடைகாலத்தில் சென்று சந்தித்தார். அவர் அந்தப் பகுதியை மிகவும் நேசித்தார், எனவே தாம் ஃப்ளோரிடாவில் செய்தது போலவே அன்னாசிப் பழத் தோட்டம் ஒன்றை நாட்டுவதற்குக் கானடா வில் முயற்சி செய்யப் போவதாகத் தமது நண்பரிடம் கூறினார். அவரது நண்பரோ அப்படிப்பட்ட முயற்சியானது வெற்றிகரமாய் இராது என்று அவரை இணங்க வைக்கக் கூடாது போயிற்று, எனவே அவர் (நண்பர்) கானடாவின் அதிக வெப்பமான பகுதியான தென்முனையின் சரிவில் அந்தத் தோப்பை நாட்டும்படிக்கு அவரை உற்சாகப்படுத்தினார். முதல் குளிர்காலத்தில், உறைபனியானது முன்னதாகவே வந்து சேர்ந்தது; அன்னாசிப் புதர்களில் பழம் எதுவும் பழுக்கும் முன்பே பனி விழத் தொடங்கிற்று. அம்மனிதர் தோள்களைக் குலுக்கிக் கொண்டு, அந்த ஆண்டில் உறைபனி முன்னதாகவே வந்து விட்டது ஆனால் அடுத்த ஆண்டில் பின்னதாக வரும் என்று கூறிக் கொண்டார். அவர் அடுத்த ஆண்டும் முயற்சி செய்தார், விளைவு முந்திய ஆண்டைப் போன்றதாகவே இருந்தது. பத்து ஆண்டுகளாக முயற்சி செய்த பிறகு, கடைசியாக அந்த மனிதர், கானடா நாட்டுத் தட்பவெப்ப நிலையானது அன்னாசிப் பழப் புதர்கள் கனி கொடுக்க அனுமதிப்பது இல்லை என்பதை ஒப்புக் கொண்டார்.

விசுவாசத்தில் நீதிமானாகிய ஆபிரகாம் என்ற மனிதரைத் தேவன் தெரிந்து கொண்டு, அவருடைய சந்ததியார்களை அவர்களைச் சுற்றிலும் இருந்த பொல்லாத உலகிலிருந்து தனிப்படுத்தி வைத்தார். அவர்களை ஆளுகை செய்ய நீதியுள்ள ஒரு பிரமாணத்தைக் கொடுத்த அவர் அவர்களுடன் (என்றென்றும்) இருப்பதாக வாக்களித்தார். எந்த ஒரு மக்களினமானது தங்கள் நற்செயல்களினால், தேவநீதியை அடைந்திருக்க முடியும் என்றால், அது இஸ்ரவேல் மக்களினமாகவே இருந்திருக்கும், ஏனெனில், தேவன் அவர்களைப் பாவம் நிறைந்த உலகில் இருந்து பிரித்து

வைத்திருந்து அவர்களின் தேவைகளுக்கு வழங்கினார். அப்படிப்பட்ட ஒரு அனுகூலமான நிலையிலும் கூட அவர்கள் யாவரும் பாவம் செய்தனர்.

நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒருவர் இரட்சிப்பை ஈட்ட முடியாது என்பதைக் கற்றுக் கொள்ள இஸ்ரவேலுக்கு போதுமான எண்ணிக்கையில் வருடங்கள் கொடுத்ததினால், எல்லா மக்களும் பாவிகளாய் உள்ளனர் என்பதை தேவன் காண்பித்துள்ளார். நற்செயல்களினால் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாது; நாம் ஒரு இரட்சகர் தேவைப்படும் நிலையில் உள்ளோம். இந்த வழிமுறையில் நியாயப்பிரமாணமானது, "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு ... நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாயிருந்தது" (கலா. 3:24). எவரொருவரும் தாம் இயேசுவின்றி இரட்சிக்கப்பட முடியும் என்ற வாதம் செய்ய முடியாது, ஏனெனில் தேவன் - இஸ்ரவேலின் மூலமாக - மிகச் சிறந்த சூழல்களில் உள்ள மனிதர்கள் கூடப் பாவிகளாய் உள்ளனர், அவர்கள் நீதிமான்களாக்கப்படுவதற்கு இயேசுவின் உதவி தேவை என்று தீர்மானமாகக் காண்பித்துள்ளார்.

## மிகச் சிறந்த ஒரு அணுகுமுறை

நியாயப்பிரமாணமும் புதிய உடன்படிக்கையும் நீதிக்கான தங்களுடைய அணுகுமுறையில் வித்தியாசப்படுகின்றன. அவைகளின் வலியுறுத்தத்தில் இந்த வித்தியாசம் உள்ளது. முதலாவது உடன் படிக்கையானது மனிதரின் நடவடிக்கைகளை ஆளுகை செய்த சட்டங் களை வலியுறுத்தியது, இரண்டாவதானது சரீரத்தைக் கட்டுப்படுத்துகின்ற ஆவியின் பண்புகளுடனே அதிகம் பணியாற்றி வருகின்றது.

முதலாவது உடன்படிக்கையானது எதிர்மறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து நேர்மறைகளில் குறைவாகவே செயல்பட்டது; இரண்டாவது உடன்படிக்கையானது நேர்மறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது, ஆனால் பொல்லாங்கு எனப்படுவதைச் செய்ய வேண்டாம் என்று நமக்குக் கூறுகின்றது. மலைப்பிரசங்கத்தில் இயேசு, குறிப்பிட்ட சில விஷயங்கள் செய்யப்படக் கூடாதவைகளாய் உள்ளன என்று கூறினார்.[2] கிறிஸ்தவர்கள் செய்யக் கூடாதவைகள் பற்றிப் பவுலும் பேசினார்.[3] இவைகள் புதிய ஏற்பாட்டில் உள்ள "நீ செய்யாதிருப்பாயாக" என்ற வகையான கூற்றுக் களில் ஒரு சில மட்டுமேயாகும். மக்கள் எவ்விதம் வாழ வேண்டும் என்பதற் கான புதிய ஏற்பாட்டுக் கட்டளைகள் எதிர்மறையாய் இருப்பதற்குப் பதில் நேர்மறையாகவே உள்ளன. பழைய ஏற்பாட்டில் கூற்றுக்கள் நேர்மறையாய் உள்ளதைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி எதிர்மறையாகவே உள்ளன.

## மிகச் சிறந்த வாக்குத்தத்தங்கள்

இரண்டாவது உடன்படிக்கையானது முதலாவதைக்காட்டிலும் மிகச் சிறந்தது ஆகும். ஏனென்றால் அதன் வாக்குத்தத்தங்கள் முதலாவது உடன்படிக்கையின் கீழ்க்கொடுக்கப்பட்டவற்றைக் காட்டிலும் மிகச்

*சிறந்தவைகளாக உள்ளன (எபி. 8:6). கீழ்ப்படிதலுக்குப் பரலோகத்தில் (1 பேது. 1:3, 4) நித்திய இரட்சிப்பு வெகுமதியாய் அளிக்கப்படும் (எபி. 5:9) என்று இஸ்ரவேலர்களுக்குத் தேவன் வாக்குத்தத்தம் அளிக்கவில்லை. தேவனைப் போன்று மாற்றப்பட்ட, மறுரூபமடைந்த உயிர்த்தெழுந்த சரீரம் பற்றிய குறிப்பிடுதல் (பிலி. 3:21; 1 யோவா. 3:2) பழைய உடன்படிக்கையில் இல்லை. இரண்டாம் உடன்படிக்கையின் கீழ் உண்மையுடன் வாழ்ந்திருப்பவர்களுக்கே அவர் இவ்வித வாக்குத்தத் தங்களை ஏற்படுத்தியுள்ளார். புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் பழைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களான இஸ்ரவேல் நாட்டில் நீடித்த ஆயுள், மற்றும் சரீரப் பிரகாரமான வளமை என்பவற்றைக் காட்டிலும் அதிகம் சிறந்தவைகளாக உள்ளன (உபா. 5:33).*

*தேவன் இஸ்ரவேலரோடு ஏற்படுத்திய உடன்படிக்கையானது நித்திய ஜீவனையோ அல்லது பரலோகத்தையோ வாக்களித்ததில்லை. இப்படிப் பட்ட வாக்குத்தத்தங்களை அது உள்ளடக்காதிருந்ததினால், பரலோகத்தில் நித்திய ஜீவனைப் பெறுதல் என்பது அந்த உடன்படிக்கையைக் காத்துக் கொள்வதைச் சார்ந்திருக்கவில்லை. பழைய உடன்படிக்கையானது இவ்வித வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தியிருந்ததென்றால், புதிய உடன்படிக்கை யானது மிகச் சிறந்த வாக்குத்தத்தங்களைக் கொண்டதாய் இராது. இதற்கு மறுபுறத்தில், புதிய உடன்படிக்கையின் கீழ், புதுப்பிக்கப்பட்ட, வளமையான பூமி மட்டுமே வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்தது என்றால், அது முதலாம் உடன்படிக்கையைக் காட்டிலும் மிகச் சிறந்த வாக்குத் தத்தத்தை உடையதாக இராது.*

*புதிய உடன்படிக்கையானது மாறுபட்டதும் மிகச் சிறந்த ஒன்றானதுமாக உள்ளது. இது மேன்மையான வாக்குத்தத்தங்களின் மேல் நிலைநாட்டப்பட்டது (எபி. 8:6). மற்றும், இது மேன்மையான சட்டமளிப்பவர் ஒருவரை (எபி. 3:3), மத்தியஸ்தரை (எபி. 12:24) நம்பிக் கையை (எபி. 7:19), ஆசாரியத்துவத்தை (எபி. 7:21-24), பலியை (எபி. 9:23), உடமையை (எபி. 10:34; 11:16), மற்றும் சுதந்தரத்தை (1 பேது. 1:3, 4) அளித்துள்ளது.*

## *முடிவுரை*

*தேவன் வித்தியாசப்பட்ட மக்களுடன் வித்தியாசப்பட்ட உடன் படிக்கைகளைக் கொண்டு செயல்பட்டுள்ளார். அவர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்த உடன்படிக்கையானது, அவர் இயேசு மூலமாக நமக்குக் கொடுத்துள்ள உடன்படிக்கையைக் காட்டிலும் தாழ்ந்த தாகவே உள்ளது. கிறிஸ்தவ யுகத்தில் நாம் மேன்மையான வாக்குத் தத்தங்களின் மேல் கட்டப்பட்டுள்ள மேன்மையான உடன்படிக்கையைப் பெற்றுள்ளோம்.*

குறிப்புகள்

[1]இவ்விதழில் தொடங்குகின்ற "புதிய உடன்படிக்கை - முழுமையான மன்னிப்பு" என்ற பாடத்தைக் காணவும். [2]மத். 5:34; 6:1-3, 7, 8, 16; 7:1, 6; 23:3, 8, 9 ஆகிய வசனங்களைக் காணவும். [3]ரோமர் 12:2, 3, 11, 14, 16, 19; 13:13; 15:1; எபே. 5:7, 18; 6:4, 6; கொலோ. 3:2, 9, 19, 21, 22 ஆகிய வசனங்களைக் காணவும்.

## பழைய உடன்படிக்கை / VS. புதிய உடன்படிக்கை

| முதலாம் உடன்படிக்கை | இரண்டாம் உடன்படிக்கை |
|---|---|
| 1. சாபங்கள் (கலா. 3:10) | 1. ஆசீர்வாதங்கள் (கலா. 3:13, 14) |
| 2. இரக்கம் இல்லை (எபி. 10:28) | 2. இரக்கம் (எபி. 8:12) |
| 3. ஆக்கினைத் தீர்ப்பு (2 கொரி. 3:9; கலா. 2:21) | 3. நீதி (2 கொரி. 5:21); ஆக்கினைத் தீர்ப்பு இல்லை (ரோமர் 8:1) |
| 4. மரணம் (2 கொரி. 3:7; ரோமர் 8:2) | 4. ஜீவன் (ரோமர் 8:2) |
| 5. செயல் வலிவற்ற பலி (எபி. 10:4, 11) | 5. செயல் வலிவுள்ள பலி (மத். 26:28) |
| 6. பாவ இச்சைகளைத் தூண்டிற்று (ரோமர் 7:5, 8) | 6. பாவ இச்சைகளை வெற்றிகொள்ள நமக்கு உதவுகிறது (கலா. 5:16) |
| 7. மாம்சத்தின்படி (ரோமர் 8:3) பலவீனமானதாக பயனற்றதாக (எபி. 7:18) உள்ளது. | 7. ஆவியின் மூலம் பலப் படுத்தப்பட்டது (எபே. 3:16) |
| 8. கோபாக்கினை (ரோமர் 4:15) | 8. ஒப்புரவு (கொலோ. 1:22) |
| 9. எழுத்து கொல்லுகிறது (ரோமர் 7:6; 2 கொரி. 3:6) | 9. ஆவியோ உயிர்ப்பிக்கிறது (ரோமர் 7:6; 2 கொரி. 3:6) |
| 10. பூரணத்துவமற்றது (எபி. 8:7) | 10. சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் (யாக். 1:25) |

நியாயப்பிரமாணமானது மனிதனின் பாவம் நிறைந்த தன்மையைச் சுட்டிக்காட்டியதேயொழிய பாவத்துடனான அவனது போராட்டத்திற்குத் தீர்வு எதையும் கொண்டிருந்ததில்லை. புதிய ஒரு வழி தேவையாய் இருந்தது. முதலாவதானது எதைச் செய்ய முடியாதிருந்ததோ அதை இரண்டாவதானது செய்ய முடிந்தது என்பதைப் பின்வருவது காண்பிக்கின்றது: "அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோமர் 8:3).

| **முதலாம் உடன்படிக்கையினால் செய்ய முடியாதவைகள்** | **இரண்டாம் உடன்படிக்கையினால் செய்ய முடிந்தவைகள்** |
|---|---|
| *1. நீதிமானாக்குதல் (ரோமர் 3:20; கலா. 2:16; 3:11, 12)* | *1. நீதிமானாக்குதல் (ரோமர் 5:1)* |
| *2. சுதந்தரர்களை ஏற்படுத்துதல் (ரோமர் 4:14)* | *2. சுதந்தரர்களை ஏற்படுத்துதல் (ரோமர் 8:17; கலா. 4:7)* |
| *3. நீதியை ஏற்படுத்துதல் (கலா. 2:21)* | *3. நீதியை ஏற்படுத்துதல் (ரோமர் 3:21, 22)* |
| *4. ஆசீர்வதித்தல் (கலா. 3:10)* | *4. ஆசீர்வதித்தல் (எபே. 1:3)* |
| *5. சுதந்தரம் கொடுத்தல் (கலா. 3:18)* | *5. சுதந்தரம் கொடுத்தல் (கலா. 3:29)* |
| *6. ஜீவனைக் கொடுத்தல் (கலா. 3:21)* | *6. ஜீவனைக் கொடுத்தல் (1 யோவா. 5:11)* |
| *7. இரட்சித்தல் (ரோமர் 10:1)*[1] | *7. இரட்சித்தல் (அப். 4:12; எபி. 7:25)* |
| *8. பூரணராக்குதல் (எபி. 7:19)* | *8. பூரணராக்குதல் (எபி. 10:14)* |
| *9. பாவங்களை மன்னித்தல் (எபி. 10:4)* | *9. பாவங்களை மன்னித்தல் (மத். 26:28).* |

முதலாம் உடன்படிக்கையானது - அதனுடைய சட்டங்கள், ஆணைகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுடன் கூட - இயேசு கொண்டு வந்ததை நமக்கு அளிக்க முடியாததாயிருந்தது: “அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே” (எபி. 8:7).

---

குறிப்பு

[1]கிறிஸ்துவின் யுகத்தின் பொழுது நியாயப்பிரமாணத்தைக் காத்துக் கொள்வதினால் இரட்சிப்படைய நாடியவர்கள் யாவரும் இழந்து போகப்பட்டனர் என்று பவுல் மறைமுகமாய்க் குறிப்பிட்டார்.